1995 ஏப்ரல் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தப் பாலம் அமைந்திருக்கிற சாலை உள்ளாட்சித் துறைக்கு உட்பட்ட சாலை என்கிற காரணத்தாலே உங்களுக்கு அந்த வினா அனுப்பப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி அமைப்புகளிலே இருக்கிற பாலமாக இருந்தாலும், சாலைகளாக இருந்தாலும் இன்றைக்கு இருக்கிற நிதிநிலையின் காரணமாக, இங்கே இருக்கிற பொதுப்பணித் துறையின் கீழே இருக்கிற ஆர்.ஆர்.டிவிஷன் என்று சொல்லுகிற அந்த டிவிஷனிலே அந்தப் பணிகள் எடுக்கப்படுகின்றன. ஆகவே, இந்தத் துறை, இது சம்பந்தமாக பொதுப் பணித் துறைக்கு கருத்துரு அனுப்பி ஆய்வுகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 278, திரு. ஆர். முருகையா பாண்டியன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

278—

அம்பாசமுத்திரம் பேரூராட்சி பேருந்து நிலையத்தை அபிவிருத்தி செய்தல்

***21479**—*திரு. ஆர். முருகையா பாண்டியன்:*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், அம்பாசமுத்திரம் பேரூராட்சி, பேருந்து நிலையத்தை அபிவிருத்தி செய்து புதுப்பேருந்து நிலையம் கட்டும் தட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேறும்?

மாண்புமிகு திரு.டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இல்லை.

திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்தில் அம்பாசமுத்திரம் வளர்ச்சி அடைந்து வரக்கூடிய ஒரு நகரம் ஆகும். இங்கே தேசியமயமாக்கப்பட்ட அனைத்து வங்கிகளும் உள்ளன. தாலுகா அலுவலகம் இருக்கிறது. ஊராட்சி ஒன்றியம் இருக்கிறது. கல்லூரிகள் 3 உள்ளன. பல மேல்நிலைப்பள்ளிகள், டி.எஸ்.பி. ஆபீஸ் மற்றும் தாலுகா

அலுவலகங்கள், முக்கியமாக அரசு மருத்துவமனை, தனியாருடைய மருத்துவமனைகள் போன்ற பல வளர்ச்சிப்பெற்று வரக்கூடிய இந்த நகரத்தில் கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்கு மேலாகவே இந்த பஸ் நிலையம் உருவாக்கப்பட்டது. இப்பொழுது கேரளாவுக்கும், பெங்களூருக்கும், சென்னைக்கும் வர வேண்டுமென்றால் இந்த அம்பாசமுத்திரம் பஸ் நிலையத்திற்கு சென்றுதான் இந்த பஸ்கள் எல்லாம் வெளியே வர வேண்டியிருக்கிறது. அநேகமாக ஒரு பஸ் அந்த ஸ்டாண்டுக்குள் போய் வெளியே வருவதற்கு 20 நிமிடம் ஆகிவிடுகிறது. இட நெருக்கடி இருக்கின்ற காரணத்தினால், எனவே, இந்த பஸ் நிலையத்தை விரிவுபடுத்த வேண்டும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது கடன் உதவியை இந்த பேரூராட்சிக்கு ஏற்பாடு செய்து கொடுத்து அந்த பஸ் நிலையத்தை ஊருக்கு வெளியே, அல்லது அங்கே இருக்கின்ற பஸ் ஸ்டாண்டையாவது விரிவுபடுத்தித் தருவதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கிற வினா புதிய பஸ் நிலையம் அம்பாசமுத்திரம் நகரத்திற்கு, பேரூராட்சிக்கு கட்டப்படுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா என்பது. இன்றைக்கு அம்பாசமுத்திரத்தில் ஏற்கெனவே இருக்கின்ற பஸ் நிலையம் சுமார் 48 சென்ட் நிலத்திலே, சுமார் ½ ஏக்கர் நிலத்திலே மட்டும்தான் இருந்து வருகிறது. அங்கே இருக்கிற மக்கள் தொகை இன்றைக்கு 33 ஆயிரம்பேர்கள். ஆகவே, அங்கே இருக்கிற நெருக்கடியைக் கருத்திலே கொண்டுதான் அரசு புதியதாக பஸ் நிலையத்தை உருவாக்க வேண்டுமென்று இன்றைக்கு கருத்துரு ஏற்கப்பட்டு ஆய்வுகளை மேற்கொண்டு, அந்த அடிப்படையிலே புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்காக இடம் பரிசீலிக்கப்பட்டு வந்தது. அதில் அம்பாசமுத்திரம் பக்கத்திலே இருக்கிற ஊர்க்காடு செல்லும் சாலையில் உள்ள கிருஷ்ணா தியேட்டருக்கு எதிர்புறம் உள்ள 3 ஏக்கர் நஞ்சை நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டது. அது எருச்சுடையார் கோயில் நிலம் என்ற காரணத்தினாலே அங்கே அறநிலையத் துறைக்கு அந்தக் கருத்துருவை பரிசீலனைக்கு அனுப்பியபொழுது அந்த நில எடுப்புக்கு உண்டான, ஆர்ஜிதத்துக்கு உண்டான தொகை மட்டும் இன்றைக்கு பல லட்சக்கணக்கிலே இருக்கிற காரணத்தினாலே அந்த நிலக் கிரயம் செய்வதற்கு அதிகம் நிதி தேவைப்படுகிற காரணத்தினால் அந்த இடம் கைவிடப்பட்டது. அதற்குப் பின்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் பேரூராட்சியினுடைய நிர்வாகத்தின் துணையோடு பேரூராட்சிக்கு சம்பந்தப்பட்ட உரக்களஞ்சியத்திலே இந்த பஸ் நிலையத்தை

1995 ஏப்ரல் 7]

அமைப்பதற்காக முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால் அந்த உரக்களஞ்சியத்தை பார்வையிட்டபொழுதும் அது புது பஸ் நிலையத்திற்கு உகந்த இடமாக இல்லாத காரணத்தினால் அதுவும் தகுதியான இடம் அல்ல என்று இன்றைக்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அம்பாசமுத்திரம் புதிய பஸ் நிலையத்திற்கு போதுமான இடம் கிடைக்காத காரணத்தினாலும், போதிய நிதி வசதி பேரூராட்சியினிடத்தில் இல்லாத காரணத்தினாலும் தற்போதைக்கு இந்த புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படுகிற பணி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பஞ்சாயத்து யூனியன் தலைவராக இருந்த நேரத்தில் தான் இந்த பஸ் ஸ்டாண்டை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி அங்கே இருக்கிற எருச்சுடையாருக்குச் சொந்தமான நிலங்களை எடுக்க வேண்டுமென்று நாங்கள் எல்லாம் முயற்சி செய்தோம். ஆனால், சென்ற மாதம் வரை அதற்குண்டான வரைபடம்கூட தாலுகா அலுவலகத்திலிருந்து கொடுக்கப்படாமல், பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் நான் கேட்டபோது கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலித்து அதிகப் பணம் செலவாகிறது என்று இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஆனாலும்கூட இப்பொழுது அந்த நிலங்கள் நமக்கு கைவசப்படுத்த தேவை இல்லாவிட்டாலும்கூட இருக்கிற பஸ் நிலையத்தைப் பொறுத்தவரையில் பக்கத்திலே பேரூராட்சிக்குச் சொந்தமான அந்த பஸ் ஸ்டாண்டிலே சில கடைகள் அதாவது உபயோகப்படாமல் சில கட்டிடங்கள் இருக்கின்றன. அந்தக் கடைகளை எல்லாம் இடித்து அப்புறப்படுத்தினால் கிட்டத்தட்ட 70 அடி அகலம், 70 அடி நீளத்திலே இடம் கிடைக்கும். அதன் மூலம் அந்த பஸ் நிலையத்தை விரிவுபடுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனாலும்கூட பேரூராட்சியிலே நிதி நிலைமை சரியாக இல்லை என்று எனக்கு நன்றாக தெரியும். எனவே ஐ.யு.டி.பி. திட்டத்திலே ஏதாவது கடன் வசதி செய்து கொடுத்து, இருக்கிற பஸ் நிலையத்தைக் கொஞ்சம் விரிவுபடுத்திக் கொடுத்தால் நலமாக இருக்கும். அதற்கு அமைச்சரவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.10

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் பேரூராட்சிக்குப் புதிய பேருந்து

நிலையம் கட்டுகிற ஒரு கருத்துரு ஆய்வுக்கு எடுக்கப்பட்டது என்பதை நான் தெரிவித்திருந்தேன். அந்த ஆய்வின் அடிப்படையிலேதான் அங்கே இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர் பல்வேறு நிலங்களை, இதற்கு சாத்தியக்கூறான இடங்களை எல்லாம் தேர்வு செய்து, பார்வையிட்டார். மாவட்ட ஆட்சித் தலைவரே நேரடியாகப் பார்வையிட்ட பிறகுதான், அந்த நிலங்களில் புதிய பஸ் நிலையம் உருவாக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்று தெரிவித்திருக்கிறார். ஆகவே இது ஆய்விற்கு எடுத்த பின்புதான் இந்த முடிவுக்கு பேரூராட்சி நிர்வாகம் வந்திருக்கிறது. மேலும் தற்போதிருக்கிற பழைய பஸ் நிலையம் சுமார் 48 சென்ட் நிலத்திலேதான் இருக்கிறது. குறைந்தது அரை ஏக்கர் நிலத்திலே மட்டும் இருக்கிறது. அந்த அரை ஏக்கர் நிலத்திலே இருக்கிற சிறு சிறு கடைகளை அகற்றினால்கூட, அந்த இடம் போதாது என்ற காரணத்தாலேதான் மாற்று இடம் நிச்சயமாகத் தேவைப் படுகிற சூழ்நிலையில், அந்த மாற்று இடங்களைத் தேர்வு செய்து, ஆய்வு செய்தோம். அந்தச் சூழ்நிலையில் இன்றைக்கு அங்கே இருக்கின்ற கடைகளை அகற்றுகிறபோது, அங்கே இருக்கிற கடை அதிபர்கள், வாடகைதாரர்கள், லீசுக்கு இருக்கிறவர்கள் எல்லாம் வழக்காடு மன்றத்திற்குச் செல்லுகின்ற சூழ்நிலை எல்லாம் இருக்கிறது. ஆகவே திடீரென்று ஒரு முடிவை அரசு எடுக்க முடியாது. அப்படி முடிவெடுத்தாலும் அது ஒரு நிரந்தரத் தீர்வாக அமையப்பெற வேண்டும். நிரந்தரத் தீர்வாக இல்லை என்று சொன்னால் மீண்டும் அந்தப் பிரச்சினை இருந்துக்கொண்டிருக்கும் என்ற காரணத்தாலேதான் தற்போதைக்கு இல்லை என்று சொல்லியிருந்தேன். மாற்று இடத்தை முறையாகத் தேர்வு செய்கிறபோது அங்கே நிச்சயமாகப் புதிய பஸ் நிலையம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 279, செல்வி கோ. மல்லிகா, மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

279—

குமாரப்பேட்டையில் மகளிர் மீனவர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல்.

***26874**—செல்வி கோ. மல்லிகா:*

மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—